உயிரியல்

ov.lk

புவிச்சரிதவியில் யுகங்களும், சகாப்தங்களும், நடைபெற்ற நிகழ்வுகளும்



e தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி மட்டம் 3.1.1: உயிரின் கூர்ப்புச் செயன்முறையை பகுப்பாய்வு செய்வர்.

புவிச்சரிதவியல் யுகங்களும், சகாப்தங்களும், நடைபெற்ற நிகழ்வுகளும்.



Eon
கல்பம்

Era
யுகம்

Epoch
கட்டம்

Period
காலம்

கல்ப்பங்கள் (Eons) நான்கு வகைப்படும்.

Phanerozoic யுகமானது மூன்று யுகங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.



01 பலியோசோயிக் Paleozoic

02 மீசோசோயிக் Mesozoic

03 சீனோசோயிக் Cenozoic

தொகுப்பு :- திரு.D.A.ஜக்ஷன், உயிரியல் ஆசிரியர் (யா /புனித பத்திரிசியார் கல்லூரி)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Hadean eon

பூமியின் தோற்றம்

Archaean eon

⇒ பூமி மேற்பரப்பில் பழைமையான பாறைகளின் தோற்றம்.
⇒ மிகப் பழைமையான உயிர்ச்சுவடு (புரோகரியோட்டா) தோற்றம்.
⇒ வளிமண்டல O_2 செறிவு அதிகரிக்கத் தொடங்குதல்.

Proterozoic eon

⇒ அல்கா பரம்பல், மென்மையான உடல் கொண்ட முள்ளந்தண்டற்ற விலங்குகளின் தோற்றம்.
⇒ பழைமையான யூகரியோட்டா உயிர்ச்சுவடு தோன்றியமை.

பலியோசோயிக் யுகம். (Paliozoic era)

⇒ விலங்குக் கணங்களின் பல்வகைமையில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு.
⇒ கடல் அல்காக்களின் பரம்பல்.
⇒ தரைமீது பங்கசுக்கள், தாவரங்கள், மற்றும் விலங்குகளின் குடியேற்றம்.
⇒ கலன் தாவரங்களின் பரம்பல்/பல்வகைமை.
⇒ என்பு மீன்களின் பல்வகைமை, முதல் நாற்பாத முளிகள், பூச்சிகளின் தோற்றம்.
⇒ அம்பிபியாக்களின் ஆட்சியுடமை.
⇒ கலன் தாவர காடுகளின் செறிவாக்கம்.
⇒ ரெப்ரீலியாக்களின் இசைவாக்க விரிகை.
⇒ தற்போதுள்ள பல பூச்சிகளின் கூட்டங்களின் தோற்றம்.
⇒ கடல் வாழ் மற்றும் தரைவாழ் அங்கிகளின் விரிவாக்கம் நடைபெறல்.
⇒ ஆரம்பக் கலன் தாவரங்களின் பல்வகைமை.



தொகுப்பு :- திரு.D.A.ஜக்ஷன், உயிரியல் ஆசிரியர் (யா /புனித பத்திரிசியார் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

மீசோசோயிக் யுகம். (Mesozoic era)

⇒ கூம்பை (Cone) தோற்றுவிக்கும் தாவரங்கள் (Gymmospermn) ஆட்சி.
⇒ டைனோசோர் கூர்ப்பும் இசைவுவிரிகை.
⇒ முலையூட்டிகளின் தோற்றம்.
⇒ Gymnospermn ஆட்சியான தாவரங்களாக தொடர்ந்தும் காணப்பட்டது.
⇒ பூக்கும் தாவரங்கள் தோன்றி, பல்வகைமை அடைந்தன.
⇒ டைனோசோர் உட்பட அநேக உயிரினங்கள் அழிந்தன.

சீனோசோயிக் யுகம். (Cenozoic era)

⇒ முலையூட்டிகள், பறவைகள்,மற்றும் மகரந்தச் சேர்க்கை நடாத்தும் பூச்சிகளின் விரிகை.
⇒ ஆட்சியான பூக்கும் தாவரங்களின் விரிகை அதிகரித்ததுடன், அநேக தற்கால முலையூட்டி வருணங்களின் விரிகையும் ஏற்பட்டது.
⇒ பல்வேறுபட்ட பிறைமேற்றா குழுக்களின் தோற்றம், முலையூட்டிகள் மற்றும் பூக்கும் தாவரங்களின் தொடர்ச்சியான விரிகை.
⇒ ஆதி மனித மூதாதையின் தோற்றம் ஏற்பட்டது.
⇒ இரு கால்களால் நிற்க/ நடக்கக் கூடிய மனித மூதாதையின் உருவாக்கம் ஏற்பட்டது.
⇒ சாதி (Homo) யினது தோற்றம் நடைபெற்றது.

கணிப்பீடு

- ஒவ்வொரு யுகத்திலும் உருவான அங்கிகளின் படங்களை (குறிப்பிட்ட காலப்பகுதிகளாக) சேகரித்து படத்தொகுப்பு ஒன்றை தயார் செய்யவும்.
- கூர்ப்புப் போக்கில் பாரிய இன அழிவு நடைபெற்ற காலப்பகுதியையும் - அவற்றிற்குரிய காரணங்களையும் தேடி அறிக.
- எதிர்காலத்தில் இன அழிவு நடைபெறுமாயின், அழிவடையலாம் என எதிர்பார்க்கப்படும் இனம் எதுவாக இருக்கக்கூடும் எனும் உமது கருத்துக்களை கடந்த கால இனங்களின் அடிப்படையுடன் தொடர்புபடுத்தி முன்வைக்க.



தொகுப்பு :- திரு.D.A.ஜக்ஷன், உயிரியல் ஆசிரியர் (யா /புனித பத்திரிசியார் கல்லூரி)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk